**// மின்னஞ்சல் மூலமாக //**

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் – சென்னை 06

**ந.க.எண். 026220/அ3/இ1/2025 நாள். 16 .05.2025**

....

| | | |
|---|---|---|
| **பொருள்** | : | பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – அனைத்து வகை ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான மாறுதல் – 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் / பதவியில் பணிபுரிபவர்களுக்கு மாறுதல், விருப்ப மாறுதல் மற்றும் பதவி உயர்வு – கலந்தாய்வு நடத்துதல் தொடர்பாக – அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து. |
| **பார்வை** | : | 1. அரசாணை எண். 151 பள்ளிக்கல்வி (SE1 (1) துறை நாள். 09.09.2022<br>2. அரசாணை எண். 149 பள்ளிக்கல்வி (SE5 (1) துறை நாள். 01.07.2024 |

........

பார்வை (2) இல் காணும் அரசாணையில் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின் அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே பணியிடத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளர்/ பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்/ உதவியாளர் / இளநிலை உதவியாளர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர், தட்டச்சர், பதிவறை எழுத்தர். பதிவறை உதவியாளர் மற்றும் ஓட்டுநர் ஆகியோர்களுக்கு இணைப்பில் காணும் அட்டவணையின்படி கலந்தாய்வு நடத்திட ஏதுவாக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் பின்வரும் அறிவுரைகளை பின்பற்றி வருவாய் மாவட்டத்திற்குள் கலந்தாய்வு நடத்திட வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

**ஓர் அலுவலகத்தில் / பள்ளியில் மூன்றாண்டு பணிக்காலத்தினை கணக்கிடுதல் : –**

1. 30.06.2025 என்ற குறிப்பிட்ட நாளினை அடிப்படையாகக் கொண்டு தற்போது பணிபுரியும் அலுவலகத்தில் / பள்ளியில் மூன்றாண்டு காலம் ஒரே பதவியில் பணி முடித்தவர்களின்

விவரங்களை தொடர்புடைய ஆவணங்களின் அடிப்படையிலும், சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உள்ள பதிவுகளின் அடிப்படையிலும் உறுதி செய்தல் வேண்டும்.

2. மூன்று ஆண்டு கட்டாய மாறுதலுக்கு மாவட்டத்திற்குள் ஒவ்வொரு பதவிக்கான முன்னுரிமையை நிர்ணயம் செய்யும்போது சம்பந்தப்பட்ட நபர் தற்போதைய பதவியில் பணிவரன்முறை செய்த நாளினை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமை தயார் செய்தல் வேண்டும்.

3. ஒரே பதவியில் மூன்று ஆண்டுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் / பள்ளியில் பணிபுரியும் பணியாளர் கலந்தாய்வில் பங்கு பெறாத நிலையில் அன்னாருக்கு வேறு ஒரு அலுவலகத்திற்கு நிருவாக மாறுதல் கட்டாயமாக அளிக்கப்படவேண்டும்.

4. எந்தவொரு அலுவலகப் பணியாளரும், தற்போது பணிபுரியும் பதவியில் ஒரே அலுவலகத்தில் மூன்றாண்டுகளுக்கு மேல் பணிபுரிய அனுமதிக்கக்கூடாது, அப்பணியாளர்களுக்கு **அவசியம் (Mandatory)** மாறுதல் அளித்தல்வேண்டும்.

5. ஒரே அலுவலகத்தில் ஒரு பிரிவிலிருந்து வேறு பிரிவிற்கு மாற்றம் செய்வதை மாறுதலாகக் கருத இயலாது என்பதால் அதனை ஏற்க இயலாது.

6. மூன்றாண்டு பணி முடித்த அலுவலகப் பணியாளர்கள் கட்டாய மாறுதலுக்குத் தகுதியுடையவராய் உள்ள போதிலும் எதிர்வரும் பதவி உயர்வு / பணிமாறுதல் அளிக்கப்படவுள்ள முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெற்றிருப்பாராயின் **(உத்தேச காலிப் பணியிட மதிப்பீட்டில் நிர்ணயிக்கப்பட்ட பணியிடங்கள் அடிப்படையில் இவ்வியக்ககத்தால் தெரிவிக்கப்படும் குறிப்பிட்ட எண்கள் வரை உள்ளவர்கள் மட்டும்)** அப்பணியாளர்கள் இம்மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள தேவையில்லை.

7. மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்டவர்களுக்கு மாவட்டத்திற்குள் மாறுதலில் செல்வதற்கான வாய்ப்பு இல்லாத பட்சத்தில் அப்பணியாளர்களது பட்டியலை பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

8. மூன்று ஆண்டுக்கு மேல் பணிபுரியும் பணியாளர்களுக்கான கலந்தாய்வுக்குப் பின்னர், ஓர் ஆண்டு பணி நிறைவு செய்த அனைத்து பணியாளர்களுக்கும் விருப்ப மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும். மேலும் மனமொத்த மாறுதல் கோரும் பணியாளர்களின் விண்ணப்பங்களும் பரிசீலனை செய்து ஆணை வழங்க வேண்டும்.

9. மூன்றாண்டு பணிமுடித்த அலுவலகப் பணியாளர்கள் கட்டாய மாறுதலுக்குத் தகுதியுடையவராய் இருந்த போதிலும் ஓய்வு பெற ஓராண்டுக்குள் இருக்கும் நிலையில் கட்டாய மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள தேவையில்லை.

10. முன்னுரிமை (Priority) அடிப்படையில் மாறுதல் கோரும் நபர்கள் விண்ணப்பத்தில் காரணம் குறிப்பிடும்போது அதற்குரிய சான்றிதழ்கள் (தகுதி வாய்ந்த அலுவலர்களால் அண்மையில் வழங்கப்பட்டது) முதன்மைக் கல்வி அலுவலரால் சரிபார்த்து முன்னுரிமைப் பட்டியல் தயார் செய்து சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

11. வருவாய் மாவட்ட அளவில் நடத்தப்படும் கலந்தாய்வுக்கு தகுதியான விண்ணப்பதாரர்களின் முன்னுரிமைப் பட்டியலை கலந்தாய்வு தேதிக்கு இரு தினங்களுக்கு முன்னதாக அனுப்பி சம்பந்தப்பட்ட பணியாளர்களிடம் ஒப்புகையை பெற்று கோப்பில் இணைத்து பராமரிக்க வேண்டும்.

**3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிபவர்களுக்கான முன்னுரிமை (Priority)**

1. 40% சதவீத கண்பார்வையற்றவர்கள் மற்றும் 40% சதவீத மாற்றுத்திறனாளிகள்.
2. மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்.
3. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள், டையாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்கள், இருதய, மூளைகட்டி அறுவை சிகிச்சை செய்தவர்கள், புற்றுநோயாளிகள்.
4. இராணுவத்தில் பணிபுரிபவர்களின் மனைவியர்.

5. விதவைகள்/மனைவியை இழந்தவர்கள்/40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத பெண் பணியாளர்கள் மற்றும் சட்டப்படி விவாகரத்து பெற்ற பெண் பணியாளர்கள்.
6. கணவன் / மனைவி முன்னுரிமை.

**விருப்ப மாறுதலுக்கு விண்ணப்பிக்க ஓராண்டு பணி முடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையில் இருந்து விலக்கு அளிக்கப்படவேண்டியவர்கள் : –**

1. 40% சதவீத கண்பார்வையற்றவர்கள் மற்றும் 40% சதவீத மாற்றுத்திறனாளிகள்.
2. மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்.
3. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள், டையாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்கள், இருதய, மூளைகட்டி அறுவை சிகிச்சை செய்தவர்கள், புற்றுநோயாளிகள்.
4. கணவன் / மனைவி முன்னுரிமை.

**புதிய நியமனம் பெற்றவர்கள், (Direct recruitment) கட்டாயமாக நியமனம் பெற்ற அலுவலகத்தில் ஓராண்டு பணிமுடித்திருத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட விலக்கு இவர்களுக்கு பொருந்தாது.**

**மாறுதல் கோரும் பணியாளர்களின் பணிமூப்பு (Seniority) நிர்ணயம் செய்தல்**

- மாறுதல் வழங்கக் கோரும் பணியாளர்களின் பணிமூப்பு (Seniority List) பட்டியல் கலந்தாய்வு தொடங்குவதற்கு இரண்டு நாளுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். 3 ஆண்டுகளுக்கும் மேல் உள்ள அலுவலகப் பணியாளர்கள் மூப்பு பட்டியல் தனியாகவும், விருப்பமாறுதல் கோரும் அலுவலகப் பணியாளர்கள் மூப்பு பட்டியல் தனியாகவும் வெளியிடப்பட வேண்டும்.

- நிரப்பத்தகுந்த காலிப்பணியிட விவரங்களை (Eligible Vacancy Only) கலந்தாய்விற்கு முன்னர் அனைத்து

அலுவலகங்களுக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**விருப்பத்தின் பேரிலான பொது மாறுதல் தொடர்பாக அளிக்கப்பட வேண்டிய முன்னுரிமை :**

I. 100 % Visually impaired Persons.

II. Physically Challenged Persons (including Visually impaired) with a disability of 40% or more (bench mark disability) and who possess relevant certificate issued by the competent authority, upholding the claim.

III. Persons having mentally ill or physically challenged children and who possess relevant certificate issued by the competent authority, upholding the claim.

IV. Persons who have undergone kidney transplantation, dialysis treatment, heart operation and those effected by cancer and brain tumour.

V. Spouse of serving personnel of defence services.

VI. Widow / widower and single women over the age of 40 and legally divorced women.

VII. Spouse employed at more than 30 Km radius from the place of work :-

If both husband and wife are employed and the distance between the places of their employment is more than or outside a 30 Km radius, their case will be considered under spouse quota and they will be treated as living in two different places. Transfer under this category will be considered only after three years of earlier transfer. (The spouse transfer category is applicable only in respect of spouse employed in School / offices under Union / State Government / Public sector Undertakings and Govt, Aided Schools. A service certificate is to be produced from the competent authority to avail the benefit)

**முன்னுரிமையில் (Priority) ஒன்றுக்கு மேற்பட்டோர் இருப்பின் கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறை.**

அ தற்போது பணிபுரியும் அலுவலகத்தில் / பள்ளியில் பணியில் சேர்ந்த நாள்.

ஆ பணியில் சேர்ந்த நாள் ஒன்றுக்குமேற்பட்டோருக்கு ஒரே நாளாக இருப்பின் அவருடைய பிறந்த நாள்.

இ பிறந்த நாள் ஒரே நாளாக இருப்பின் பெயரின் அகர வரிசை

மாறுதலுக்கு விண்ணபிக்கும் பணியாளர்கள் உள்மாவட்டம் / மாவட்டம் விட்டு மாவட்டம் ஆகிய இரு கலந்தாய்விற்கும் விண்ணபிக்கும் பட்சத்தில் அவர்கள் உள்மாவட்டத்திற்குள் நடைபெறும் கலந்தாய்வில் கலந்து கொண்டு மாறுதல் ஆணை பெறுபவர்கள் மாவட்டம் விட்டு மாவட்ட கலந்தாய்வில் கலந்து கொள்ள இயலாது.

கலந்தாய்வில் கலந்துகொண்டு மாறுதல் பெற்ற பணியாளர்களுக்கு முதன்மைக் கல்வி அலுவலரால் ஒப்பமிடப்பட்ட ஆணை மின்னஞ்சல் வழியாக சார்ந்த பள்ளி / அலுவலர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

அவ்வாறு பெறப்பட்ட ஆணையில் சார்ந்த அலுவலக தலைவர் மேலொப்பமிட்டு சார்ந்த அலுவலகப் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஏற்கனவே மூன்றாண்டு கட்டாய மாறுதலில் வேறு அலுவலகங்களுக்குச் சென்றவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து மூன்றாண்டுகள் பணி முடித்த பின்னரே ஏற்கனவே பணிபுரிந்த அலுவலகத்திற்கு மாறுதல் அளிக்கப்படவேண்டும்.

விருப்ப மாறுதல் மற்றும் மனமொத்த மாறுதலைப் பொறுத்தவரை பார்வை (2) இல் காணும் அரசாணை **வ.எண் 3 இல் Registration of Requests for Transfer என்ற தலைப்பில் a) to h)** வரை தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி விண்ணப்பங்களை பரிசீலித்து மாறுதல் வழங்கப்படவேண்டும்.

சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை சென்னை மாவட்டத்திலுள்ள அலுவலகங்கள் / பள்ளிகள் மற்றும் பேராசிரியர்

அன்பழகனார் கல்வி வளாகத்தில் இயங்கும் பிற இயக்ககங்களில் கண்காணிப்பாளர், பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் ஆகிய பதவிகளில் பணிபுரியும் பணியாளர்கள் வரையிலான பணியாளர்களின் பட்டியல் பணி மூப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்டு **(மூன்று ஆண்டுக்கு மேற்பட்டவர்களுக்கான கட்டாய மாறுதல் , விருப்ப மாறுதல் மற்றும் மனமொத்த மாறுதல் ஆகியவை)** பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களால் கலந்தாய்வு நடத்தப்படும்.

சென்னையில் உள்ள முதன்மைக் கல்வி அலுவலம், மாவட்டக் கல்வி அலுவலகங்கள், வட்டாரக் கல்வி அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் பதிவறை எழுத்தர், பதிவறை உதவியாளர் மற்றும் ஒட்டுநர் பதவிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மூன்று ஆண்டு பணி முடித்தவர்கள், விருப்ப மாறுதல் மற்றும் மனமொத்த மாறுதல் கலந்தாய்வு சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலராலும் பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகத்தில் இயங்கும் பள்ளிக் கல்வி இயக்ககம், மற்றும் பிற இயக்கங்களில் பணிபுரியும் இப்பணியாளர்களுக்கு பள்ளிக் கல்வி இணை இயக்குநராலும் (பணியாளர் தொகுதி) நடத்தப்படும்.

**சென்னை மாவட்டம் சார்ந்து முன்னுரிமை பட்டியல் தயாரிக்க ஏதுவாக Over 3 years, Willing Transfer request and District to District request Transfer சார்பான பணியாளர்களின் விவரங்களை கலந்தாய்வு நாளுக்கு இருதினங்களுக்கு முன்னதாக சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் பிற இயக்ககங்களிலிருந்து பள்ளிக் கல்வி இயக்ககத்தில் ஒப்படைக்கவேண்டும்.**

வருவாய் மாவட்டத்திற்குள் கலந்தாய்வு முடிந்த பின்னர் **மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் விண்ணப்பங்களை உரிய ஆதாரங்களுடன் பரிசீலித்து. நன்கு கூர்ந்தாய்வு செய்து முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரை மற்றும் கையொப்பத்துடன் பதவி வாரியாக தனித்தனியாக (உரிய இணைப்புகளுடன்) உடனடியாக பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு கீழ்குறிப்பிட்டுள்ள மின்னஞ்சலுக்கு அனுப்புதல் வேண்டும்.**

**இதேபோல் வருவாய் மாவட்டத்திற்குள் கலந்தாய்வு முடிந்த பின்னர் பதவிவாரியாக தனித்தனி தாளில் காலிப்பணியிட விவரங்களை (Resultant Vacancy) முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்.**

மாவட்ட விட்டு மாவட்டம் மாறுதல் கோரி தகுதி வாய்ந்த விண்ணப்பங்கள் ஏதுமில்லையெனில் இன்மை அறிக்கை தவறாது அனுப்புதல் வேண்டும்.

| | |
|---|---|
| கண்காணிப்பாளர் / பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் ஆகிய பணியிடவிபரங்களை | a3sec.tndse@gmail.com |
| உதவியாளர்கள்/இளநிலை உதவியாளர்கள்/ தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகிய பணியிட விபரங்களை | cosea4sec@gmail.com |
| பதிவரை எழுத்தர் / பதிவறை உதவியாளர் / ஓட்டுநர் ஆகிய பணியிட விபரங்களை | a5sectndse@gmail.com |

எனவே, பார்வை (2) ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் மற்றும் மேற்காணும் அறிவுரைகளைப் தவறாது பின்பற்றி எவ்வித புகாருக்கும் இடமின்றி நன்முறையில் கலந்தாய்வினை செவ்வனே நடத்தி முடித்து இவ்வியக்கத்திற்கு அனுப்பவேண்டிய விவரங்களை நினைவூட்டுக்கு இடமின்றி அனுப்பிட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

16/05/25

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

16.5.2025

**இணைப்பு** : 1. அரசாணை 149 ,
2. கலந்தாய்வு அட்டவணை

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் வழியாக),

**நகல் :**

1. மாநில திட்ட இயக்குநர் , ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை 6
2. உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 6.
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம்,சென்னை 6
4. இயக்குநர், தனியார் பள்ளிகள்இயக்ககம்,சென்னை 6
5. இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்பயிற்சிநிறுவனம், சென்னை 6
6. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை 6
7. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர், முதன்மை உடற்கல்விஆய்வாளர்அலுவலகம், சென்னை 6

(1–7) தங்கள் அலுவலகப் பணியாளர்கள் சார்பான விவரம் அளிக்கும் பொருட்டு பணிந்தனுப்படுகிறது

8. இவ்வியக்கக அ2, அ4, அ5 பிரிவிற்கு
9. தகவல் பலகைக்கு